வடுகப்பட்டியல் பூமிதான நிலங்கள்

* வினா எண். 879 திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம் ஈரோடு தாலுக்கா வடுகப் பட்டி கிராமம் வினோபாஜிநகர் அரிசன மக்களுக்கு பூமிதானத் துறை மூலம் அண்மையில் நிலம்ஏதேனும் வழங்கப்பெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சொ. ந. பழனிசாமி: அமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்விக்கு இல்லையென்று பதில் சொல்லுகிறார்கள். ஆனால் அரிசன மக்களுக்கு வடுகப்பட்டி கிராமத்தில் பூமி தானம் நிலம் கொடுக்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. இதை அரசு ஆராய்ந்து அவர்களுக்கு நிலம் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தற்போது கொடுக்கப் படவில்லை. அது பரிசீலிக்கப்படும்.

இறுதி சடங்குகளுக்கான மானியம்

*வினா எண். 880 திரு. வெ. கருணாமூர்த்தி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தாழ்த்தப்பட்டோர் இனத்தில் யாரேனும் இறந்து விட்டால் அவர்களது இறுதி சடங்குகளுக்கென ரூ. 50— வழங்க படும் என்று அரசு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதை ரூ. 100— ஆக உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) அரிசனர், மலைவாழ் மற்றும் அரிசனத்திலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறியவர்கள் குடும்பத்தி ல்யாராவது இறந்தால் இறப்பு ஒவ்வொன்றிற்கும் ஈமக்கடன் செய்வதற்கென அரசு ரூ. 50— மானியம் வழங்கும் திட்டம் 1978-79 முதல் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

(ஆ) நிதி உதவியினை ரூ. 100— ஆக அதிகரிக்க உத்தே சம் தற்போது இல்லை

1979 ஏப்ரல் 30]

திரு. வே. கருணாமூர்த்தி : இதுபற்றி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ? வந்திருக்கிறது என்றால் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

*மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது 50 ரூபாய் வழங்கப்பட்டு வருவது போதாது என்றும் அதை 200 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்றும் கோரிக்கை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். அண்ணாமலை : அரிசனங்கள், மலைவாழ் மக்கள் ஈமச் சடங்குக்காகக் கொடுக்கப்படக்கூடிய 150 ரூபாய் கூட ஊராட்சித் தலைவர்களைக் கேட்டால் ஒன்றிய ஆணையாளரைக் கேள் என்றும் ஆணையாளரைக் கேட்டால் ஊராட்சித் தலைவரைப் போய் கேள் என்றும் அவர்களை அலைக்கழிக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதுபற்றி அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ? இதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கிராமப் பகுதிகளில் ஊராட்சி மன்றத் தலைவர்கள்தான் வழங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அப்படி எந்த ஊராட்சியிலாவது வழங்கவில்லை என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு ஆண்டில் இந்தக் கணக்கின்படி எவ்வளவு செலவு அரசுக்கு ஏற்படுகிறது ? 50 ரூபாயை 100 ரூபாய் என்ற அளவுக்காவது உயர்த்துவதற்கு அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20.]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதுவரை கிடைத்திருக்கிற தகவலின்படி 3 ஆயிரத்து 857 நபர்களுக்கு 1 லட்சத்து 92 ஆயிரத்து 850 ரூபாய் வழங்கப் பட்டு இருக்கிறது இந்த அரசால். 1978–79 ஆம் ஆண்டில் 4 லட்சத்து 33 ஆயிரம் ரூபாயும் 79–80 ஆம் ஆண்டு 5 லட்சம் ரூபாயும் இதற்கென ஒதுக்கியிருக்கிறோம்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டு இருந்தால் எந்தப் பகுதியிலே என்று சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். என் தொகுதியிலே பாண்டலம் கிராமத்திலே சண்முகம் என்ற ஒரு அரிசன நபர் இறந்துவிட்டார். அதற்காக பஞ்சாயத்திடம் பணம் கேட்டால் யூனியனிடம் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். யூனியனிடம் கேட்டால் தாலுகா ஆபீசில் கேளுங்கள் என்று சொல்கிறார்கள், தாலுகா ஆபீஸிலே

கேட்டால் டவுன் பஞ்சாயத்துக்கு அனுப்பிவிட்டார்கள். இந்த நிலைமையில் இதுவரையில் கிடைக்கவில்லை. அதை எப்படிக் கொடுக்க வேண்டுமென்ற முறை தெரியாமல் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரோ அல்லது தாலுகா தாசில்தாரோ இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்கான விதிமுறைகள் என்ன என்பதைப்பற்றி விளக்கமாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத்திலே உள்ள தலைவர்கள் தான் அந்த நிதியை வழங்க வேண்டும். அதற்கென சான்றிதழ் பெறவேண்டும். அந்தச் சான்றிதழை முனுசீப் அல்லது ஊராட்சி மன்ற உறுப்பினர் அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் வழங்கலாம். அந்தச் சான்றிதழைப் பெற்ற பிறகு இறந்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அந்த மனுவை ஊராட்சி மன்றத் தலைவரிடம் கொடுத்துப் பணம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படிக் கொடுக்கவில்லையென்றால் ஒன்றிய ஆணையரிடம் புகார் செய்து அதைப் பெற்றுக் கொள்ளலாம், அதுவும் இல்லையென்றால் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர், அந்த நபர் இறந்து பல மாதங்கள் ஆகியும் இன்றைக்குத்தான் கேள்வி மூலம் சொல்லியிருக்கிறார்கள். ஏன் உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை என்பதற்கு அவர்தான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அரிசனங்கள் இறந்துவிட்டால் இறுதிச் சடங்கிற்காக 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை 100 ரூபாயாக ஆக்க வேண்டும். ஆனால் அந்த நிதியை ஊராட்சிமன்றத் தலைவரிடம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அவரிடம் பத்து ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. ஆகவே அவர் கொடுக்க முடியாது. வேறு இடத்திலேயும் கேட்டு வாங்க முடியாது. ஆகவே இறந்த உடனே அந்தத் தொகையை பெறுவதற்கு வேறு ஏதாவது ஏற்பாடுகள் செய்வதற்கு உத்தேசம் உண்டா ? அல்லது இதற்காக ஊராட்சி மன்றத்திடம் தனியாக நிதி வைத்திருக்க வேண்டுமென்றும் இறந்துவிட்டால் உடனே கொடுக்க வேண்டுமென்றும் உத்திரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதற்கென 100 ரூபாய் கையிருப்பில் வைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிடப்பட்டிருக்கிறது. ஏன் ஊராட்சி மன்றத் தலைவர் அதைத் தரவேண்டுமென்று நியமித்திருக்கிறோம் என்றால் அவர் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள் குடியிருப்பவராக இருப்பார், அத்தோடு மக்கள்

1979 ஏப்ரல் 30]

எளிதாக அணுகக்கூடியவராக இருப்பார். தாசில்தார்கள் போன்றவர்களிடம் இதை விட்டால் இழுத்து அடிக்கக் கூடிய நிலைமை வரும், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற காரணத்தால் இப்படி ஆணையிட்டிருக்கிறோம்.

கல்லாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 881—திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் அரும்பாவூரிலிருந்து கிருஷ்ணாபுரம் வழியே செல்லும் நெடுஞ்சாலையில் கல்லாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கப்படும்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். வி. இராமசாமி: பேரவைத் தலைவர் அவாகளே, இதனுடைய மதிப்பு எவ்வளவு, எப்போது இது கட்ட துவங்கப்படும் என்று அறிவிக்க இயலுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, மேற்கண்ட இந்த பாலமானது 1979—80 ஆம் ஆண்டு பாகம் இரண்டு திட்டத்திலே சேர்க்கப்பட வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார். இந்த பாலம் 6 லட்ச ரூபாய் தோராய மதிப்பிலே செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் இரண்டாம் பாகத் திட்டத்திலே மேற்கொள்வதற்கான வேலைகள் அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

முஸ்குந்தா நதியின் குறுக்கே அணை

*வினா எண் 882—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள லக்கி நாயக்கன் பட்டி அருகில் உள்ள முஸ்குந்தா நதியின் குறுக்கே அணைக்கட்ட அல்லது (Percolation Tank) கட்ட செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன?